அன்றைக்கு கல்லிலே கலைவண்ணம் கண்டார்கள். இன்றைக்கு குப்பையிலே மின்சாரத்தைக் கண்டுள்ளார் நம்முடைய அம்மா அவர்கள். இனி யாரும் யாரையும் 'குப்பை' என திட்டமாட்டார்கள். குப்பைக்கும் மரியாதை கிடைக்கச் செய்துள்ளவர் நமது அம்மா அவர்கள். ஒன்றுக்கும் உதவாத உவர் நீர், உப்பு நீர் என்று திட்டமாட்டார்கள். உவர் நீரையும் தனது மதிநுட்பத்தால் உயர் நீராக மாற்றியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) திண்டுக்கல், தஞ்சாவூர் நகராட்சிகளை மாநகராட்சிகளாகத் தரம் உயர்த்துதல் ஆகிய அறிவிப்புகளையும் வெளியிட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, மாண்புமிகு உறுப்பினர்களுடைய நன்றியோடு, என்னுடைய நன்றியையும் இணைத்துத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி. (குறுக்கீடு)

4. தகவல் கோரல்

தேசிய முற்போக்கு திராவிடக் கழக உறுப்பினர்களுக்கு மானியக் கோரிக்கை விவாதத்தைத் தொடங்கி வைத்துப் பேச வாய்ப்பளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. அ. சவுந்தரராசன், என்ன?*

***திரு. அ. சவுந்தரராசன்**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று பால் வளத் துறை மானியக் கோரிக்கையைத் துவக்கி வைக்கிற அரிய வாய்ப்பை எங்களுடைய கட்சியின் துணைத் தலைவர் அவர்களுக்கு நீங்கள் வழங்கினீர்கள். அது நல்ல வாய்ப்புதான். ஆனாலும், நாடாளுமன்ற ஜனநாயகத்தில் பிரதான எதிர்க்கட்சி விவாதத்தைத் துவக்கி வைக்கக்கூடிய தன்மைதான் ஒரு மரபாக இருக்கிற காரணத்தினால், நேற்று நடந்தது, நேற்று நடந்ததாக இருக்கட்டும். நான் அதில் வேறு ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. நாளையாவது எதிர்க்கட்சியினருக்கு விவாதத்தைத் தொடங்கி வைப்பதற்கான வாய்ப்பைத் தரவேண்டுமென்று நான் என்னுடைய வேண்டுகோளாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய முற்போக்கு திராவிட கழகத்தினுடைய*

[திரு. எம். ஆறுமுகம்] [2013 ஏப்ரல் 10

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தேவையான நேரத்தை நீங்கள் ஒதுக்குகிறீர்கள் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலுங்கூட, சட்டமன்ற மரபுப்படி பிரதான எதிர்க்கட்சியில் இருக்கக்கூடியவர்கள் முதலில் விவாதத்தைத் தொடங்கி வைக்க வேண்டுமென்ற அடிப்படையில், நீங்கள் எடுத்திருக்கக்கூடிய அந்த நிலையை மறுபரிசீலனை செய்து, மீண்டும் அவர்கள் சட்டமன்றத்திற்கு உள்ளே வந்து விவாதத்தினைத் தொடங்கி வைப்பதற்கான வாய்ப்பினைக் கொடுப்பதற்கு, பரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில தினங்களாக சட்டமன்றத்திலே தே.மு.தி.க. கட்சியினுடைய உறுப்பினர்கள் ஏறக்குறைய 40 நிமிடங்கள், 45 நிமிடங்கள் பேசிய பிறகு, இறுதியாக வெளிநடப்பு செய்யக்கூடிய அளவிற்குப் பேசுவது என்பது நடைமுறையிலே ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லாவிட்டாலுங்கூட இதுநாள் வரையிலும் இருந்து வரக்கூடிய, மரபினுடைய அடிப்படையில் பிரதான எதிர்க்கட்சிதான் முதன்முறையாக அழைக்கப்பட வேண்டும் என்ற அந்த மரபினுடைய அடிப்படையில், அவர்களையே பேச அழைக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய வேண்டுகோளும் என்பதை இந்த நேரத்திலே வலியுறுத்துகிறேன்.

நண்பகல் 12—00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய முற்போக்கு திராவிட கழகத்தினுடைய உறுப்பினர்களுக்கு, பிரதான எதிர்க்கட்சி என்ற அடிப்படையிலே, மானியக் கோரிக்கையிலே முதலாவதாகப் பேசுவதற்கு நீங்கள் வாய்ப்பளித்து இருக்கின்றீர்கள். மிக அதிக நேரம் பேச அனுமதித்திருக்கின்றீர்கள். இருந்தபோதிலும்கூட, அவர்கள் விரிவாகப் பேசிவிட்டு, வெளிநடப்பு செய்துவிட்டு, நீங்கள் அவையிலே

2013 ஏப்ரல் 10] [*முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா*]

வாய்ப்பு தரவில்லை என்று வெளியிலே பேசியிருக்கின்றார்கள் என்பதெல்லாம் உண்மைதான், கவலைக்குரிய விஷயங்கள்தான். இருந்தாலும், நாடாளுமன்ற, சட்டமன்ற ஜனநாயக நெறிமுறைகளை நிச்சயமாக இந்த அரசு பேணி வருகின்றது. அந்த அடிப்படையிலே, மீண்டும் அவர்களுக்கு முதலாவதாகப் பேசுவதற்கான வாய்ப்பை அளிக்குமாறு மனித நேய மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தே.மு.தி.க. கட்சியைச் சார்ந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முதலாவதாகப் பேச இதுநாள்வரை வாய்ப்பு தந்திருக்கிறீர்கள். தொடர்ந்து அந்த வாய்ப்பை அவர்களுக்கு வழங்க வேண்டும். நாடாளுமன்ற, சட்டமன்ற நடவடிக்கைகளின் அடிப்படையில், ஜனநாயகத்தின் அடிப்படையில், தொடர்ந்து அவர்களுக்கு அந்த வாய்ப்பை வழங்க வேண்டுமென்று, காங்கிரஸ் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் இன்றைக்குத் தெரிவித்திருக்கிற அந்தக் கருத்துக்கு, ஒன்றை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். விதி 98–ன்கீழ், "தீர்மானம் ஒன்றை பேரவைத் தலைவர், பேரவைக்குப் படித்துக் காட்டிய பின்னர், அவர் அழைக்கிற வரிசையில், உறுப்பினர்கள் அதன்மீது பேசலாம்" என்றுதான் இருக்கிறது. யாரை, எந்த வரிசையில், அழைப்பது என்பது பேரவைத் தலைவருடைய உரிமையாக இருக்கிறது. அந்த அடிப்படையிலே—தே.மு.தி.க. உறுப்பினர்கள் செய்த அத்தனை காரியங்களையும், உறுப்பினர்கள் பார்த்துக் கொண்டிருந்தீர்கள். 40 நிமிடங்கள், 45 நிமிடங்கள் இங்கே பேசிவிட்டு, வெளியிலே போய், "சபாநாயகர் எங்களுக்கு வாய்ப்பு கொடுக்கவில்லை" என்று சபாநாயகரையும், அவையையும் கொச்சைப்படுத்துகிற வகையிலே, பேசியிருப்பது மிக, மிக வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. நான் அந்த முடிவை அறிவிப்பதற்கு முன்னதாக, எதிர்க்கட்சி வரிசையில் இருக்கின்ற தலைவர்களையெல்லாம் அழைத்துப் பேசிவிட்டுத்தான் முடிவை அறிவித்திருக்கிறேன். இதை நீங்கள் மறுபடியும் மறுபரிசீலனை செய்யச் சொல்வது எப்படி சரியாக இருக்கும் என்று தெரியவில்லை.*